# கிராம சபைக் கூட்டத்தை இன்று நடத்த தமிழக அரசு உத்தரவு!

சென்னை, நவ. 23–

கடந்த, 1 ம் தேதி உள்ளாட்சிகள் தினத் தன்று நடக்கவிருந்த கிராம சபைக் கூட்டம், நிர்வாக காரணங்களுக்காக ஒத்திவைக்கப் பட்டது. இந்த கிராம சபைக் கூட்டம் இன்று (23.11.2024) நடக்கிறது.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

பஞ்சாயத்தில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களை சிறப்பித்தல், மகளிர் சுய உதவிக்குழுக்களை கவுரவித்தல், வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து விவாதித்தல், தூய்மை பாரத இயக்க (ஊரகம்) திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிதிட்டம், ஜல் ஜீவன் திட்டம், தீன்தயாள் கிராமப்புற திறன் மேம்பாட்டு திட்டம் ஆகியவை குறித்து இந்த கிராம பை கூட்டத்தில் இந்த கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவிக்கபட்டுள்ளது.

## சுரங்கக் குத்தகை உரிமை விவகாரம் :

# இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனத்துக்கு அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு

**சென்னை, நவ. 23 –**

**மேலூர் வட்டத்தில் சுரங்க குத்தகை உரிமை வழங்குதல் தொடர்பாக சுரங்க அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்ட இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்திடமிருந்து விண்ணப்பம் எதுவும் பெறவில்லை என்றும், அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும் தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.**

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு: –

ஒன்றிய அரசால் 24.06.2024ல் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், நாயக்கர்பட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமத்திற்கு ஆய்வுடன் இணைந்த சுரங்கக் குத்தகை உரிமம் வழங்க ஏல அறிவிப்பு செய்யப் பட்டு, 07.11.2024 அன்று இந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் நிறுவனத்தினை தகுதியான நிறுவனமாக சுரங்க அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, அந்நிறுவனத்திடமிருந்து தமிழக அரசு எந்த விண்ணப்பமும் பெறவில்லை எனவும், அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தஞ்சை கூத்தரசனின் 79 ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா!

## அவரது இல்லத்தில் நாளை எளிமையாக நடைபெறுகிறது!

*சென்னை, நவ. 23 -*

தி.மு.க. தலைமை இலக்கிய அணிப் பொருளாளர் நா.சந்திரபாபு தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தி.மு.க. முன்னணிப் பேச்சாளரும், தலைமை இலக்கிய அணியின் துணைச் செயலாளராய், அணிச் செயலாளராய் நாற்பதாண்டு காலம் பொறுப்பு வகித்து கடந்த மூன்றாண்டு காலம் புரவலர் பொறுப்பில் இருந்து வருபவருமான தஞ்சை கூத்தரசனின் 79 ஆண்டு பிறந்த நாள் (24.11.2024) விழாவும் அவருடைய துணைவியார் திருமதி. இந்துமதிக்கு 74ஆவது ஆண்டு பிறந்த நாள் (24.11.2024) விழாவும் ஒரு சேர வருகிறது.

இவர்கள் இருவரின் பிறந்த நாள் விழா, சென்னை - 14, இராயப் பேட்டை, 50/52, முத்து முதலிதெரு (ஜி.3, டாக்டர், விசுவேசுவர் அபார்ட் மென்ட்ஸ்) எனும் முகவரியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நாளை எளிமையாக நடை பெறுகிறது.

1966 ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணாவின் அடியொற்றி கழகத்தின் பேச்சாளராய் தமிழ்நாடு முழுவதும் பேசியும் மும்பை, பெங்களூர், கோலார் தங்கவயல் ஆகிய பிற மாநிலங்களில் சொற்பொழிவாற்றியும் வந்துள்ள தஞ்சை. கூத்தரசன் சிங்கப்பூர், மலேசியா நாடுகளில் இலக்கிய நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சிறப்புக்குரியவர்.

79 ஆவது ஆண்டு பிறந்த நாள் காணும் இவர் கழகத்தினரின் அழைப்பை ஏற்று கழக நிகழ்ச்சிகளில் இப்போதும் பேசி வருகிறார். முத்தமிழறிஞர் கலைஞர், தமிழக முதல்வர் தளபதி ஆகியோரின் தலைமையை ஏற்று பணி புரிந்து வரும் தஞ்சை. கூத்தரசன் தம்பதியரை நாம் அனைவரும் வாழ்த்திடுவோம். (தஞ்சை. கூத்தரசனின் தொலைபேசி எண்கள்: 044-28350894, 90030 90686, 94441 77737)

இவ்வாறு அவர் தன் அறிக்கையில் கூறியுள்ளார்.



வேலூர் மாவட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கி, கொண்டாடுவது குறித்து மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. இதில் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர்கள் என்.பிரகாஷ், அர்ச்சனா நவீன் சங்கர், வி.எம்.டி.ஏ. பாலாஜி, டீட்டாசரவணன், ராஜ் கமல், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் யூ.ரவிக்குமார், துணை அமைப்பாளர்கள் முரளி பாஸ்கர், கே.சி.சுரேஷ்குமார், இப்ராஹிம், சத்திஷ்குமார் மற்றும் நகர ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட மாடப்பள்ளி ஊராட்சி காவாப்பட்டறை பகுதியிலுள்ள புதிய மின்மாற்றியினை சட்டமன்ற உறுப்பினரும் ஒன்றியக் கழகச் செயலாளருமான ஏ.நல்லதம்பி திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் வட்டார வளர்ச்சி அலுவலர் என்.சங்கர், ஒன்றியக் குழு துணை தலைவர் டி.ஆர்.ஞானசேகரன், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் வி.அன்பழகன், ஒன்றியக் குழு உறுப்பினர்கள் கஸ்தூரி ரகு, இளவரசி இளங்கோ, ஊராட்சி மன்றத் தலைவர் கோமதி கார்த்திகேயன், ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் எஸ்.வி. விஜயகுமார், மாவட்டப் பிரதிநிதி சிவலிங்கம், மாவட்ட தொண்டரணி தலைவர் எம்.ஜி.ராமசந்திரன், சாமிக்கண்ணு ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க மூன்று நாள் சுற்றுப்பயணமாக திருச்சி, நாகப்பட்டினம், கடலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**23/11/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| மாலை 05:30 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | ரத்னா காம்ப்ளக்ஸ், ஆஸ்பத்திரி சாலை, துறையூர். |
| மாலை 05:45 மணி | பெரம்பலூர் மக்களவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு விழா. | திருச்சி சாலை, துறையூர். |
| மாலை 06:00 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா. | பேருந்து நிலையம், துறையூர். |

**24/11/2024 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | மீனவர் அணி துணைச் செயலாளர் அக்கரைப்பேட்டை மனோகரன் இல்லத் திருமண விழா. | வி.பி.என்.திருமண மண்டபம், நாகப்பட்டினம் |
| காலை 11:00 மணி | மாவட்டக் கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா. | கலைஞர் அரங்கம், அவுரித் திடல், நாகப்பட்டினம். |
| மதியம் 12:00 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.ஏ.திருமண மஹால், நாகப்பட்டினம். |
| மாலை 03:00 மணி | சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் அவர்களின் இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சி. | சிக்னேச்சர் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |

**25/11/2024 திங்கள்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | புனித வளனார் மேல்நிலைப்பள்ளி, கம்மியம்பேட்டை, கடலூர். |
| காலை 11:15 மணி | முத்தமிழறிஞர் கலைஞர் நூலகம் திறப்பு விழா. | சங்கரன் சாலை, துறைமுகம், கடலூர். |
| காலை 11:45 மணி | கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | எம்.எம்.எம்.திருமண மண்டபம், துறைமுகம், கடலூர். |
| மதியம் 01:00 மணி | மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர மோட்டார் வாகனம் வழங்குதல். | சி.கே.பள்ளி வளாகம், கடற்கரைச் சாலை, அண்ணா நகர், கடலூர். |
| மாலை 04:30 மணி | அரசு ஆய்வுக் கூட்டம் | ஆட்சியர் அலுவலகம், கடலூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 21-11-2024

